25.03.2025 எம்.சி.ஓ.பி. எண். 159/2016 ம.சா.2 ஜெயக்குமார்

**குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்துபோன கிருபாகரன் எனக்கு நண்பர். ஆற்காட்டிலிருந்து பாண்டிச்சேரிக்கு காரில் சென்றோம். நான் டிரைவர் சீட்டிற்கு பின்னால் உட்கார்ந்து சென்றேன். காரில் 8 பேர் சென்றோம். விபத்து சம்மந்தமாக எங்களுடன் வந்த மணிவேலன் என்பவர் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். புகாரில் 9 பேர் காரில் சென்றதாக கூறியுள்ளார். டயர் வெடித்து கார் ஜாயின்ட் துண்டிக்கப்பட்டு மரத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. ஆற்காடு சாலை அகலமான சாலை தான், வேகமாக செல்லலாம். கிருபாகரன் காரை வேகமாக ஓட்டி சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. கிருபாகரன் காரை வேகமாக ஓட்டி சென்று அவராகவே விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டவர் பெயர் TN 73 A 0819 இனோவா கார் ஓட்டுநர் கிருபாகரன் என குறிப்பிடப்பட்டுள்ளது. கிருபாகரன் எனக்கு நண்பர் என்பதால் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.